(ஆ) மணலியிலுள்ள மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் தொழிலாளர் பிரச்சினை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, கடந்த ஆண்டு ஜூலை 5 ஆம் தேதி முதல் வேலை மறுக்கப்பட்டு, வெளியே நிற்கக்கூடிய 1400 மணலி மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்தை ஈர்க்க இந்தச் செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். அது மத்திய அரசாங்கத்தினுடைய பொதுத் துறை நிறுவனம். சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய இரண்டு தீர்ப்புகளைப் பெற்ற பிறகும்கூட, அந்த உத்தரவுகளை

(11-45)

மதித்து அந்தத் தொழிலாளர்களுக்கு கடந்த 16 மாத காலமாக வேலை வழங்கப்படவில்லை. தமிழக அரசினுடைய செயலாளர் அவர்கள் 3 சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியபிறகும்கூட, அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு "பிரின்சிபிள் எம்ப்ளாயர்" என்று முறையில் அந்தப் பொதுத்துறை நிறுவனம் கலந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அதனுடைய காண்ட்ராக் டர்களையும் வரவிடாமல் தடுத்திருக்கிறது. இது சம்பந்தமாக விசாரணை நடத்த இருக்கக்கூடிய சமரச அதிகாரியும் ஏப்ரல் மாதத்திலும், அண்மையில் செப்டம்பர் மாதத்திலும் அனுப்பி இருக்கக்கூடிய சமரச முறிவு அறிக்கையில் "காண்ட்ராக்டர்கள் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கத் தயாராக இருந்தும், அந்தப் பொதுத்துறை நிறுவனமான 'மெட்ராஸ் பெர்டிலைசர்' அவர்களுக்கு வேலை கொடுப்பதற்குக் குறுக்கே நிற்கிறது" என்ற குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள், வேறு வழியில்லாமல் மறியல் போராட்டத்தில் அந்தக் கம்பெனியின் முன்னே ஈடுபடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை விரைவாகத் தீர்க்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே விடுத்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொதுத்துறை நிறுவனம் தொடர்பாக, காண்ட்ராக்ட் அடிப்படையில் வேலை செய்து கொண்டிருக்கிற தொழிலாளர்

1989 நவம்பர் 1] *[திரு. பொன். முத்துராமலிங்கம்]*

களை, அவர்கள் வேலைக்குத் தொடர்ந்து செல்வதற்கு ‘பிரின் சிபிள் எம்ப்ளாயர்’ என்கிற நிறுவனம் மறுக்கிறது என்றும், இது தொடர்பாக அரசாங்கம் தலையிட்டு, பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் வேண்டு கோளை ஏற்றுக்கொண்டு தொழிலாளர் நலத்துறை செயலாளர் (லேபர் செகரட்டரி) 3 கட்ட பேச்சுவார்த்தை நடத்தியிருக் கிறார்கள். இன்னும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு இணக்கமான முடிவை அவர்கள் ஏற்படுத்துவார்கள். இல்லை யென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) தீப்பெட்டித் தொழில்களுக்கு ஏற்கெனவே இருந்த கலால் வரி வித்தியாசத்தைத் திரும்ப நடைமுறைப்படுத்த வேண்டு மென்று பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது, தமிழகத்தில் இருக்கிற “ஹேண்டு-மேடு செக்டாரில்” தயாரிக் கப்படுகிற கைவினைத் தீப்பெட்டித் தொழில் நசிந்து போகக் கூடிய அளவுக்கு மத்திய அரசினுடைய வரவு-செலவு திட்டத் திலே “விம்கோ” என்ற பன்னாட்டு கம்பெனிக்கு அளிக்கப்பட்ட வரிச் சலுகையை மாற்றியமைக்க வேண்டும் என்று இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து, ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு மாநில அரசின் சார்பில் அனுப்பியிருக்கிறோமே, அதற்கு இதுவரை ஏதாவது பதில் வந்ததா?

சிவகாசி, சாத்தூரிலிருந்து ஓசூர் வரை தமிழகத்தில் பரவலாக குறைந்தபட்சம் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றையதினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த ‘டி’ கிளாஸ் பேக்டரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு கம்பனிக்காக இத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக் கின்றன. இதற்கு ஏதாவது பதில் வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.